வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4379/ஆ4/2025 நாள்: 15.10.2025

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு –2025–2026 –மாணவர்கள் பெயர் பட்டியல் (Nominal Roll ) பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 17.10.2025 –வரை காலநீட்டிப்பு வழங்கப்பட்டமை –அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்களுக்கு –தெரிவித்தல் –சார்பு

பார்வை : 1.அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012770/ எச்.1/2025 நாள் 25.09.2025 மற்றும் 03.10.2025 , 13.10.2025

2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 26.09.2025 , 03.10.2025

===============

பார்வை 1–ல் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, நடைபெறவுள்ள 2025–2026 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலினை அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 25.09.2025 அன்று பிற்பகல் முதல் 10.10.2025 அன்று வரை பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. சில பள்ளிகள் பெயர்ப்பட்டியலினை பதிவிறக்கம் செய்யாத நிலையில் தற்போது 17.10.2025 அன்று வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

எனவே 17.10.2025–க்குள் மேற்காணும் பணியினை முடித்திட அனைத்து வகை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

//ஓம்.சு.தயாளன் //
முதன்மைக்கல்விஅலுவலர்(பொ)
வேலூர்

பெறுநர்,

அனைத்து வகை அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் வேலூர் மாவட்டம் தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது .

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி ) வேலூர்,அவர்களுக்கு தகவலுக்காக தெரிவிக்கலாகிறது.
3. மாவட்ட அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு கனிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.